

துணை முதல்வராக அறிவிக்கப்பட்ட உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் அவர்களை – நேற்று முன்தினம் அவரது இல்லத்தில், துணை முதல்வராக அறிவிக்கப்பட்ட உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



துணை முதல்வராக அறிவிக்கப்பட்ட உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் கீழ்ப்பாக்கத்தில் உள்ள இனமானப் பேராசிரியர் அவர்களின் இல்லம் சென்று, இனமான பேராசிரியர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பேராசிரியர் அவர்களின் புதல்வர் அ.அன்புச்செல்வன், பேரன் அ.வெற்றியழகன் எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் உள்ளனர்.



கழக துணைப் பொதுச் செயலாளர் – நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களை நேற்று முன்தினம் அவரது இல்லத்தில், துணை முதல்வராக அறிவிக்கப்பட்ட உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



தமிழ்நாடு அரசின் துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதை முன்னிட்டு உதயநிதி ஸ்டாலின் அவர்களை, கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளருமான தயாநிதி மாறன் எம்.பி. சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

### நாமக்கல் கிழக்கு மாவட்டம் நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில்

## அ.தி.மு.க.வைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்தனர்!

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. முன்னிலையில்

நாமக்கல், அக். 01 -

நாமக்கல் கிழக்கு மாவட்டம் நாமகிரிப்பேட்டை ஒன்றியம் நாமகிரிப்பேட்டை பேரூர், தண்ணீர்பந்தல்காடு 4 வது வார்டு எம்.ஜி.ஆர். காலனி அ.தி.மு.க. கிளை துணைச் செயலாளர் முருகேசன் தலைமையில் இளைஞர் அணி மற்றும் மகளிர் அணியைச் சார்ந்த 100 பேர் உறுப்பினர் அட்டையுடன் அ.தி.மு.க. விலிருந்து விலகி, நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் முனனிலையில் தி.மு.க.வில் தங்களை இணைத்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் பேரூர்க் கழகச் செயலாளர் அன்பழகன், பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் எம்.சுரேஷ் ஆகியோர் ஏற்பாட்டில் மாவட்டப் பிரதிநிதி அங்கு (எ) மோகனசுந்தரம், சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி சமூக வலை தளம் ஒருங்கிணைப்பாளர் தாமரைக் கண்ணன், பேரூர் இளைஞர் அணி துணை அமைப்பாளர் பழனிவேல், முருகதாஸ், மணிகண்டன், லோகு, லட்சுமி மற்றும் கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## புதிய அமைச்சர்களுக்கு - துறைகள் ஒதுக்கீடு!









சென்னை, அக். 01 –

தமிழ்நாடு அமைச்சரவையில் புதிய அமைச்சர்களாக பதவியேற்றுக்கொண்ட 4 பேருக்கும் துறைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சராக மீண்டும் பொறுப்பேற்றுள்ள செந்தில் பாலாஜிக்கு ஏற்கெனவே அவர் வகித்து வந்த மின் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆகிய துறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அமைச்சர் ஆர்.ராஜேந்திரனுக்கு சுற்றுலாத்துறை ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் கரும்பு, கரும்பு ஆயத்தீர்வை மற்றும் கரும்பு பயிர் மேம்பாடு ஆகிய துறைகளும் ராஜேந்திரனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சர் சா.மு.நாசருக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் அயலகத் தமிழர் நலன் ஆகிய துறைகள் வழங்கப்பட்டுள்ளன.

அமைச்சர் கோவி. செழியனுக்கு தொழில்நுட்பக்கல்வி உள்ளிட்ட உயர்கல்வித்துறை ஒதுக்கப்பட்டுள்ளது.

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு

## சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்த்து!

### தொலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிவித்தார்!



சென்னை, அக்.01-

தமிழ்நாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் துணை முதலமைச்சர் பொறுப்பு நேற்று முன்தினம் வழங்கப் பட்டதறிவோம்.

புதிய துணை முதலமைச்சராகப் பதவி உயர்வு பெற்ற அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் உள்பட பலரும் நேரில் சந்தித்து, வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் நடிகர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் அலைபேசி மூலம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களைத் தொடர்பு கொண்டு வாழ்த்துத் தெரிவித்தார்.

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு

## கலைஞானி கமல்ஹாசன் வாழ்த்து!

### வலைதளத்தில் பதிவு!



சென்னை, அக்.01 -

துணை முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து வலைதளத்தில் கலைஞானி கமல்ஹாசன் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

அது வருமாறு:-

தமிழ்நாட்டின் துணை முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள தாங்கள், இன்று, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மீதும், தமிழக மக்களின் மீதும் உறுதிமொழி எடுத்துக்கொண்டுள்ளீர்கள் அவர்கள் இருவருக்கும் நீங்கள் உண்மையாக சேவை செய்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

இவ்வாறு கலைஞானி கமல்ஹாசன் பதிவிட்டுள்ளார்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு

## சமாஜ்வாடி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் வாழ்த்து!



லக்னோ, அக்.01–

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து சமாஜ்வாடி கட்சியின் தலைவரும், உத்திரப்பிரதேச மாநில முன்னாள் முதல்வருமான அகிலேஷ் யாதவ் செய்தி வெளியிட்டுள்ளார்.

அதில் அவர், “தமிழ்நாடு துணை முதலமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துகள்!. புதிய பொறுப்பில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெற்றிகரமாகச் செயல்பட வாழ்த்துகிறேன்” என்றுகுறிப்பிட்டுள்ளார்.



திருச்சி மாநகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 35 மண்டலம் மூன்றில் செந்தண்ணீர்புரம் பகுதிக்குட்பட்ட முத்துமணி டவுன் தெருவில் சுமார் 450 வீடுகள் உள்ளது. இந்த பகுதியில் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி ஒன்று அமைத்து தருமாறு பொதுமக்கள் வைத்த கோரிக்கையை ஏற்று அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி புதிதாக கட்டப்பட்ட ரூ 11 லட்சம் மதிப்பீட்டிலான பத்தாயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள புதிய நீர் தேக்கத் தொட்டியை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மண்டல குழு தலைவர் மு.மதிவாணன், உதவி செயற்பொறியாளர் கிருஷ்ணமூர்த்தி, உதவி ஆணையர் சரவணன், பகுதிச் செயலாளர் விஜயகுமார், வட்டச் செயலாளர் ரங்கநாதன், 35 வது வார்டு மாமன்ற உறுப்பினர் சுரேஷ், இளநிலை பொறியாளர் ஜோசப் உட்பட அரசு அதிகாரிகள், பொதுமக்கள் உடன் இருந்தனர்.

### உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வராகப் பதவியேற்பு!

## கோவை காந்திபுரத்தில் கழகத்தினர் இனிப்பு வழங்கல்!

### தமிழ்ச்செல்வன் தலைமையில் உற்சாகம்!

கோவை, அக். 01 –

கோவை காந்திபுரத்தில் தி.மு.க. தொழிலாளர் அணி மாநில துணைச்செயலாளர் தமிழ்ச்செல்வன் தலைமையில் திமுகவினர் பட்டாசு வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதல்வராக பதவியேற்றதை அடுத்து, தமிழ்நாடு முழுவதும் தி.மு.க.வினர் இனிப்புகள் வழங்கி கொண்டாடி வருகின்றனர்.

இதேபோல், கோவை காந்திபுரத்தில், தி.மு.க. தொழிலாளர் அணி மாநில் துணைச் செயலாளர் தமிழ்ச்செல்வன் தலைமையில் தி.மு.க.வினர் தந்தை பெரியார் திருவுருவச் சிலை மற்றும் பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தும், பட்டாசு வெடித்தும், பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர்.

உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதல்வராக பதவியேற்றது மகிழ்ச்சியை அளிப்பதாகவும், அவர் மக்களுக்கு இன்னும் சிறப்பான பணிகளை செய்வார் என மகிழ்ச்சியுடன் பேட்டியின்போது தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில், பகுதிக் கழகச் செயலாளர் சேதுராமன், முன்னாள் மாநில மாணவரணி துணைச் செயலாளர் வழக்கறிஞர் கணேஷ்குமார், ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் டெம்போ சிவா,

தொழிற்சங்க துணைத் தலைவர் சுப்பிரமணி, மாவட்டப் பொருளாளர் கண்ணன், சோமு ஆட்டோ சங்கத் தலைவர் பூபதி, ஜி.ஜி. மூர்த்தி, கருப்புசாமி, தொண்டரணி துணை அமைப்பாளர் கணேசன், சீனிவாசன், மூத்த முன்னோடி ராமமூர்த்தி, காந்திபுரம் மணி, சரவணன், முரளி, பன்னீர் செல்வம், அப்பு என்ற மோகன், சா.கார்த்திகேயன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திருச்சியில், பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு, ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்ற மாபெரும் தனியார் வேலை வாய்ப்பு முகாமில் பங்கேற்று, தேர்வானவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார், ஜமால் முகமது கல்லூரி செயலாளர் காஜா நஜுமுதீன் உட்பட மாணவ, மாணவிகள், அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.